மாண்புமிகு திரு. சே ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) கருங்காலிவகை மரங்கள் (பாதுகாப்புச்) சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு கருங்காலிவகை மரங்கள் (பாதுகாப்புச்) சட்ட முன்வடிவு, மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு கருங்காலிவகை மரங்கள் (பாதுகாப்புச்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11-35

(இ) ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"

எனக் கோருகிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவை அறிமுக நிலையிலே நாங்கள் எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவினை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1994-95 மீது பொது விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994-95-ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம். பல்வேறு உறுப்பினர்கள் பொது விவாதத்தில் பேச வேண்டுமென்று பெயர் கொடுத்திருக்கிறார்கள். இப்போது மணி 11.36. எனவே பேசுகிற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய கருத்துக்களைச் சுருக்கமாக பத்து, பத்து நிமிடங்களுக்குள் பேசி முடிக்க வேண்டும். (குறுக்கீடு) 10 நிமிடங்கள்தான். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-95-ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடு குறித்த விவாதத்தில் பங்கு கொள்கிற வாய்ப்பு நல்கிய தங்களுக்கும், காங்கிரஸ் கட்சிக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய விவாதத்தைத் தொடங்குகிறேன். முதலிலே பத்து மணித் துளிகள்தான் பேச வேண்டுமென்று கூறியிருக்கிறீர்கள்.